செ.வெ.எண்: 34 நாள்: 19.07.2016

# பத்திரிகை செய்தி

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைநாடும் இளைஞர் படித்து பயன்பெறும் வண்ணம் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தின் மூலமாக பல்வேறு வகையான போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்திடத் தேவையான பல்வேறு புத்தகங்கள், மாதாந்திர சஞ்சிகைகள் மற்றும் பத்திரிக்கைகள் அடங்கிய நூலகம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் 2016-ம் ஆண்டில் நடைபெறவுள்ள தமிழ்நாடு ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் 1062 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் பூர்த்திசெய்யப்படுவதற்கான விளம்பரம் விரைவில் வெளிவர உள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் அனைவரும் தேர்விற்கு விண்ணப்பித்து சிறந்த முறையில் தேர்வு எழுதி வெற்றி பெறுவதற்குத் தேவையான இலவச முன்பயிற்சி வகுப்புகள் இவ்வலுவலக தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்புகளில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுகளில் அனுபவமிக்கவர்களும், இதுபோன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளித்துள்ள வல்லுநர்களும் பயிற்சி அளிக்க உள்ளனர். மேலும் பயிற்சி வகுப்புகளின்போது பாடக்குறிப்புகள் வழங்கப்பட்டு மாதிரித் தேர்வுகளும் அவ்வப்போது நடத்தப்படும். எனவே இத்தேர்வுக்கு விண்ணப்பிக்க உள்ளவர்கள் அனைவரும் இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பயன்பெற ஏதுவாக தங்கள் முழுமையான சுயவிவரங்கள் அடங்கிய புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பத்தினை இவ்வலுவலகத்திற்கு நேரிலோ அஞ்சல் வழியிலோ விண்ணப்பித்து முன்பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வலுவலகத்தில் இதற்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கும் நாளிலிருந்து அதில் கலந்துகொள்ள உரிய தகவல்கள் தெரிவிக்கப்படும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**